பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 01 திங்கட்கிழமை 16.11.2020 கதிர் 242

## அரியாலையில் 62 பேரின் மாதிரிகள் சோதனைக்கு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.16

லண்டனில் இருந்து வந்து அரியாலையில் தங்கி நின்று மீண்டும் லண்டனிற்குப் பயணிக்கச் சென்றவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டமையை அடுத்து அரியாலையை சேர்ந்த 62 பேருக்கு பி.சி. ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

2

# மாவீரர் நாளை நினைவுகூர முடியாது; மீறினால் தனிமைப்படுத்தப்படுவீர்கள்!

### இராணுவத் தளபதி மிரட்டல்



போரில் மரணித்த சாதாரண மக்களை நினைவு கூர்வதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது. அதனை வீட்டில் இருந்து செய்யலாம். ஆனால், பயங்கரவாத அமைப்பில் இருந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்திவிட்டு உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் மாவீரர் தின நினைவேந்தலைப் பொது வெளியில் நடத்துவதற்கு இடமளிக்க முடியாது. அதை மீறி நடத்தினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு இன்று எச்சரிக்கை விடுத்துள்ளார் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட்

2

### மேன்முறையீட்டு நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு

# வில்பத்து காடழிப்பு சட்டவிரோதமானது!

### தம் சொந்தச் செலவில் மர மீள்நடுகையை மேற்கொள்ளுமாறு ரிஷாத்துக்கு உத்தரவு

**கொழும்பு,நவம்பர்16**

**வில்பத்து சரணாலயத்தின் கல்லாறு வனப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காடழிப்பு நடவடிக்கை சட்ட விரோதமானது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.**

**காடழிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் மரங்களை முன்னாள் அமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தமது சொந்த நிதியில் நட வேண்டும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

2



## விழாக்கள் வேண்டாம் என்கிறார் ஜனாதிபதி

ஜனாதிபதியாகத் தாம் பதவி ஏற்று ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில், அது தொடர்பிலான விழாக்கள் எதனையும் நடத்த வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2

## பாடசாலைகள் எப்போது ஆரம்பம்? இன்னமும் இறுதி முடிவு இல்லை

### கல்வி அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



பாடசாலைகளை எதிர்வரும் 23ஆம் திகதி மீண்டும் திறப்பது குறித்து இன்னமும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

2

## பொஸ்கோ வரலாற்றுச் சாதனை! இம்முறை 159 மாணவர்கள் சித்தி

### அஜினி என்ற மாணவி 195 புள்ளிகள்



யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய வரலாற்றில் அதிகமான மாணவர்கள் இவ் வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர்.

புதிதஜோண்பொஸ்கோ வித்தியாலயத்தில் இம்முறை 228 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

குறித்த மாணவர்களில் 159 மாணவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி

2

## வலி மேற்கு பிரதேச சபை பட்ஜெட் அமோக ஆதரவுடன் நிறைவேற்றம்

### கூட்டமைப்பு, முன்னணி, ஈ.பி.டி.பி. ஓரணியில்!

(எஸ்.நிதர்ஷன்)

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தவிர, ஏனைய அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவோடு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் இன்று நிறைவேற்றப்பட் டுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் அமர்வு இன்று நடைபெற்றது.

இதன் போது சபையின் தவிசாளர் நடனேந்திரனால் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வரவு - செலவு திட்டம் மீதான விவாதம் இடம்பெற்றது.

இதன் பின்னர் இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஒருவர் மட்டும் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்க ஏனைய அனைவரதும் ஆதரவுடன் அது நிறைவேற்றப்பட்டது.

25 உறுப்பினர்களைக்

2

## துணை மருத்துவ சேவை வெற்றிடங்களை மாகாண ரீதியில் நிரப்புவதற்கு நடவடிக்கை

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.16

வடக்கு மாகாணத்தில் பெருமளவு வெற்றிடங்கள் காணப்படும் துணை மருத்துவ சேவைகளுக்கு சுகாதார அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அவற்றுக்கு மாகாண இளையோர்கள் விண்ணப்பிப்பதன் ஊடாக பயிற்சியின் பின் வேலைவாய்ப்பு கிடைக்கும்

- இவ்வாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

2

## யாழ்ப்பாணத்துக்குப் பெருமை சேர்த்த மகாஜன மாணவி வடக்கில் முதலிடம்!

### அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடம்; வைத்தியராகுவதே இலக்கு என்கிறார் ஜனுஸ்கா



யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி சுபாஸ்கரன் ஜனுஸ்கா 2020ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

2

## துணை மருத்துவ சேவை வெற்றிடங்களை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

சுகாதார அமைச்சினால் துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த ஒன்பது பதவி நிலைகளுக்கும் ( பாடசாலை பற் சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், கண் தொழிலநுட்பவியலாளர், செயற்கை அவயவ தொழில்நுட்ப வியலாளர், பொது சுகாதார பரிசோதகர், இதயத்துடிப்பு பதிவாளர், மூளை மின் இயக்கப் பதிவாளர், பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், பல் தொழில்நுட்பவியலாளர்), நிறைவுகாண் மருத்துவ சேவையைச் சேர்ந்த மூன்று பதவி நிலைகளுக்கும் (மருந்தாளர், தொழில்சார் சிகிச்சையாளர், கதிரியலாளர்) ஆள்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளுக்கு விண்ணப்ப முடிவுத் திகதி நவம்பர் 30, 2020 என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்களை **www.health.gov.lk** என்ற சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆள்சேர்ப்பிற்காக 2017/2018 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியவர்கள் விண்ணப்பிக்க முடியும். இவர்கள் சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் **www.health.gov.lk** ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இணையம் மூலமாக விண்ணப்பிப்பதற்கு உதவுவதற்காக வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்பதற்கு உதவி தேவையானவர்கள் அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை தேவையான ஆவணங்களுடன் செல்வதன் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் ஒன்றரை தொடக்கம் இரண்டு வருடங்களிற்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்குரிய பயிற்சி நெறிகளுக்கு உள்வாங்கப்படுவர். பயிற்சி ஆரம்பிக்கும் காலத்திலிருந்து அனைவருக்கும் கொடுப்பனவாக கணிசமான தொகை வழங்கப்படும்.

பயிற்சியின் நிறைவின் போது சித்தியடையும் அனைவருக்கும் நியமனம் வழங்கப்படும். மிக முக்கியமாக ஆள் சேர்ப்பின் போது மாகாண மற்றும் மாவட்ட கோட்டாக்கள்(ஒதுக்கீடுகள்) ஒதுக்கப்பட்டுள்ளன. அதனால் வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கான வாய்ப்புகள் அதிகம்.

அத்துடன் வடமாகாணத்தில் இந்த மருத்துவ சேவைகள் சார்ந்த பதவி நிலைகளுக்கு பெருமளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே தகுதிவாய்ந்த அனைவரும்உடனடியாகவிண்ணப்பிப்பதன் மூலம் அரசாங்க வேலை வாய்பினையும் மக்களுக்கு சேவையாற்றும் சந்தர்ப்பத்தினையும் பெற்றுக்கொள்ளலாம் - என்றுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் விவரம் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் நிலவும் பல வெற்றிடங்கள் மத்திய சுகாதார அமைச்சினால் நிரப்பப்பட வேண்டியவையாக காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை ஒத்த பதவி வெற்றிடங்கள் ஏனைய மாகாணங்களிலும் உள்ளன. அனைத்தையும் நிரப்பும் நோக்கில் தற்போது விண்ணப்பங்கள் போரப்பட்டுள்ளன.

இவ்வாறு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதில் இம்முறை ஒரு விசேட அம்சம் காணப்படுகின்றது. அதாவது விண்ணப்பங்கள் மாகாண ரீதியில் கோரப்பட்டுள்ளது. அதனால் மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களிற்கு மாகாணத்தைச் சேர்ந்தோரே நியமிக்கப்படுவர்.

இவ்வாறு உள்ள12 வகையான வெற்றிடங்களிற்கும் தெரிவு செய்யப்படுவோர் பயிற்சியின் பின்னர் பணிக்கு அமர்த்தப்படவுள்ளமையினால் கணிதம் , விஞ்ஞானம் கற்ற மாணவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த முடியும். - என்றார்.

## யாழ்ப்பாணத்துக்குப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவர் யாழ். மாவட்டம் மற்றும் வடக்கு மாகாணத்தில் முதலிடத்தையும், தமிழ் மொழி மூலம் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

எதிர்காலத்தில் வைத்தியராகுவதே தனது இலக்கு என்று சாதனை மாணவி ஜனுஸ்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மகாஜனக் கல்லூரியில் இம்முறை 84 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி இதில் 36 மாணவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெட்டுப் புள்ளி 160 புள்ளிகள் என்ற நிலையைத் தாண்டி சித்தி பெற்றுள்ளனர்.

நீண்ட வருடத்தின் பின்பு பாடசாலையில் இவ்வாறு அதிகமான மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர் என்று பாடசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

## பொஸ்கோ வரலாற் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
160ஐத் தாண்டி பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

பாடசாலையின் கடந்த கால சித்திகளுடன் ஒப்பிடும்போது வரலாற்றில் அதி உயர் சித்தியாக 70 வீதம் பதிவாகியுள்ளது.

குறிப்பாக நல்லூர் செட்டித்தெருவில் வசிக்கும் பொறியியலாளர்களான அஞ்ஜிதன், குமுதினி ஆகியோரின் மகளான அஞ்ஜிதன் அஜினி எனும் மாணவி 195 புள்ளிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வலி மேற்கு பிரதேச ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்ட இந்தச் சபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ளது.

இங்கு கூட்டமைப்பில் - 9, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - 6, ஈ.பி.டி.பி. - 4, ஐ.தே.க. - 3, சுயேச்சைக் குழு - 2 உறுப்பினர்கள் என மொத்தமாக 24 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

ஆயினும் சபையின் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் மட்டும் எதிராக வாக்களித்தார். இதனால் 23 மேலதிக வாக்குகளால் வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

## பாடசாலைகள் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் இன்று காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 9ஆம் திகதி அரச பாடசாலை மாணவர்களின் மூன்றாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கவிருந்தன. எனினும், நாட்டில்தற்போதுள்ள நிலைமைகளுக்கு அமைய எதிர்வரும் 23ஆம் திகதி பாடசாலைகளைத் திறக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் தற்போதுள்ள சூழ்நிலைகளை ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்காகக் கல்விமான்கள், மருத்துவத்துறையினருடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இதன் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். - என்றார்.

## விழாக்கள் வேண்டாம் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றியீட்டினார்.

இதனையடுத்து கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி அனுராதபுரத்தில் கோட்டாபய ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்த நிலையில், நாளை மறுதினம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டு ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இந்த நிலையிலேயே அவர் விழாக்கள் எதனையும் நடத்தவேண்டாம்எனதெரிவித்துள்ளார்.

அத்துடன், தமக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்புவோர் எவ்வித நிகழ்வுகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் வீண் செலவுகளை செய்ய வேண்டாம் எனவும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

தாம் பதவி ஏற்று ஓராண்டு பூர்த்தியாகும் நாளை மறுதினம் நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றவுள்ளார்.

## வில்பத்து காடழிப்பு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை அழித்து, சட்ட விரோதக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனக் குற்றஞ்சாட்டி, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சுற்றுச்சூழல் நீதி மையத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை அழித்து, கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை சுற்றுச்சூழலுக்குப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் 30 வருட ஆயுத போரைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் அங்கமாகவே மேற்படி வனப்பகுதி அழிக்கப்பட்டு, முஸ்லிம் மக்கள் குடியேற்றப்பட்டமையும், அப்போது மீள்குடியேற்ற அமைச்சராக ரிஷாத் பதியுதீன் செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கவை.

## மாவீரர் நாளை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜெனரல் சவேந்திர சில்வா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறையில் உள்ளது. மக்கள் ஒன்று கூடுவது தொடர்பில் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி நடைமுறைகளை மீறி ஏனையோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பொதுவெளியில் எவராவது செய்யப்பட்டால் அவர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

போரில் மரணித்த சாதாரண மக்களை நினைவுகூர்வதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது. அதனை வீட்டில் இருந்து செய்யலாம். ஆனால், பயங்கரவாத அமைப்பில் இருந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்திவிட்டு உயிரிழந்தவர்களை அதுவும் பொது வெளியில் குழுக்களாக இணைந்து நினைவுகூர்வது ஏற்புடைய நடவடிக்கையாக இருக்காது. உலகில் எந்தவொரு நாடும் இதற்கு அனுமதி வழங்காது.

எனவே, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையிலும், அவ்வமைப்புக்குப் பரப்புரை செய்யும் நோக்கிலும் பொதுவெளியில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படுமானால் - சுகாதாரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## அரியாலையில் 62 ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் அடங்கும் அரியாலை கிராமத்திற்கு இரு மாதங்களின் முன்னர் லண்டனில் இருந்து வருகை தந்த ஒருவர் தனிமைப்படுத்தல் நிறைவு செய்து வீடு திரும்பியிருந்தார். இருப்பினும் மீண்டும் நாடு திரும்பும் முயற்சிக்காக ஒக்டோபர் மாதம் கொழும்புக்குச் சென்று வந்தார்.

இவ்வாறு கொழும்பு சென்று மீண்டவர் திரும்பவும் லண்டன் பயணிக்கும் நோக்கில் கடந்த 10 ஆம் திகதி யாழில் இருந்து கொழும்பிற்குப் பயணித்து 11 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டதில் அவருக்குக்குக் கொரோனாத்தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது..

இதனால் அவருடன் பழகியவர்கள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குள் 12 குடும்பங்கள் உடனடியாக தனிமைப் படுத்தப்பட்டன. இதில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் , ஓர் பெண் சட்டத்தரணி ஆகியோரும் உள் அடங்கியிருந்தனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் , அயலில் உள்ளவர்களில் இருந்து முதல்கட்டமாக இன்று 62 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இடம்பெறும் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றின் பெறுபேறு இன்று இரவு வெளிவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com
**தொலைபேசி இலக்கம் -**
**076 443 8622**






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சரிகிறது அரசின் செல்வாக்கு

சில விடயங்களை அளவீடு செய்வதற்கு வெளிப்படையான காட்டிகள் இல்லை. என்றாலும் அவை அளவிடப்படுகின்றன.

ஓர் ஊடகத்தின் நேயர் எண்ணிக்கை என்ன, மக்கள் மத்தியில் அது எவ்வளவு தூரம் செல்கின்றது, செல்வாக்குச் செலுத்துகின்றது என்பவற்றை எல்லாம் எப்படி அளவீடு செய்வது என்று நாம் மலைக்கலாம். ஆனால் அவற்றை எல்லாம் அளவீடு செய்யும் கட்டமைப்புகள், நிறுவனங்கள் உள்ளன. அது விரிவான ஒரு துறை.

அது போன்று அரசியல் கட்சிகள், அரச நிர்வாகங்களின் ஆட்சித் திறன், செல்வாக்கு போன்றவையும் கூட அளவீடு செய்யப்படுகின்றன.

இந்த அளவீட்டில் சமூக ஊடகங்கள் கணிசமாக பங்கு வகிக்கின்றன.

தேர்தல் காலத்தில் வேட்பாளர்களும், கட்சிகளும், தரப்புகளும் தங்களுக்குச் செல்வாக்கு, மக்கள் ஆதரவு அபரிதமாக உள்ளது என்பதைப் போலியாகக் காட்டுவதற்கு சமூக ஊடகங்களையும் வளைத்துப் போடுவதுண்டு. அத்தரப்புகள் போலிப் பெயர்களில், அடையாளங்களில் முகநூல் உட்பட சமூக ஊடகங்களில் கணக்குகளைத் திறந்து பித்தலாட்டம் நடத்துவது வழமை.

ஆனால், சாதாரண காலத்தில் அவை செயற்படுவதில்லை. போலிச் செல்வாக்கை, ஆதரவைக் காட்ட வேண்டிய தேவை அத்தரப்புகளுக்கு அச்சமயத்தில் இருப்பதில்லை. அதனால் அந்தத் திசையில் தங்கள் கவனம், அவதானம், நிதி ஆகியவற்றை அவை செலவிடுவதில்லை.

இலங்கையைப் பொறுத்தவரை தேர்தல்கள் எல்லாம் முடிந்து விட்டன. உடனடித் தேர்தல்கள் ஏதும் மிக விரைவில் நடப்பதற்கான சாத்தியக்கூறு ஏதும் இல்லை. அதனால் சமூக ஊடகங்களில் போலி செல்வாக்கைக் கிளப்பும் தேவையும் அதிகம் இல்லை.

இந்த நிலையில்தான் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷவின் முதலாவது ஆண்டு ஆட்சிக் காலம் நிறைவை எட்டுகின்றது. இச்சமயத்தில் அவரது ஆட்சியின் செல்வாக்கைக் கணிப்பீடு செய்யும் தரப்புகளுக்கு அதிர்ச்சி தரும் ஆச்சரியம் காத்திருப்பதாக புள்ளி விவரங்களைத் திரட்டும் கொழும்பு நிறுவன வட்டாரம் ஒன்று தகவல் வெளியிடுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி நிர்வாகம் மீதும், மொட்டுக் கட்சிக் கூட்டணியின் ஆட்சி முறைமையிலும் தென்னிலங்கை மக்கள் அதீத அதிருப்தியில் – விசனத்தில் – இருக்கின்றார்கள் என்பதுதான் அந்தத் தகவல்.

அண்மைய நாடாளுமன்றத் தேரதல் வரை உச்சமாக இருந்த ராஜபக்ஷக்களின் செல்வாக்கும், ஆதரவும், வரவேற்பும் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்து வருகின்றன. சமூக ஊடகங்களில் பிரதிபலிக்கப்படும் கருத்து நிலைப்பாடு இதற்கு நல்ல சான்று என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலுக்கு முன்னரும், தேர்தலுக்குப் பின்னரும் கூட கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஒட்டுமொத்த ஆதரவை நல்கி வந்த ஊடகத்தரப்புகளே – குறிப்பாக சமூக ஊடகத் தரப்புகளே – அதிகளவில் அவரையும், அவரது அரசையும் பொதுவெளியில் நார் நாராகப் பிய்த்துதறிக் கடுமையாக விமர்சிக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பது பலரையும் ஆச்சரியத்துக்குள் மூழ்கடித்திருக்கின்றது.

மக்கள் பெரிய எதிர்பார்ப்போடு, ஆதரவை வழங்கி, தேர்தலிலே பெரு வெற்றியைத் தேடிக் கொடுத்தார்கள். ஆனால் அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்யத் தவறியமையால் மக்கள் கருத்து அரசுக்கு – ஆளும் தரப்புக்கு – எதிராகத் திரும்பத் தொடங்கியிருக்கின்றது என்பதே பொதுவான அபிப்பிராயமாகும்.

2015 ஜனவரியில் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன கூட சுமார் இரண்டு வருடங்களுக்கு தமது செல்வாக்கைச் சரிய விடாது, வடக்கிலும், தெற்கிலும் கச்சிதமாகப் பேணினார். அதன் பின்னர்தான் செல்வாக்குச் சரிவு அவருக்கு ஏற்பட்டது.

ஆனால், இப்போதைய ஜனாதிபதிக்கு முதலாம் வருடத்திலேயே கெடுகாலம் ஆரம்பித்து விட்டது போலும் என்று தெற்கின் அரசியல் விமர்சகர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கையாண்ட முறைமை, பொருளாதார நெருக்கடிகள், முஸ்லிம்களுக்கு மாறான போக்கைத் தேர்தல் சமயத்தில் காட்டிவிட்டு, இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக அவர்களையே அரசியல் ரீதியாக அரவணைத்தமை என்று பல விடயங்கள் இந்நிலைமைக்கான காரணங்களாகக் கூறப்படுகின்றன.

இந்தச் செல்வாக்குச் சரிவு பற்றிய களநிலைமைகளை ஆட்சித் தரப்பும் உணர்ந்து, கவனத்தில் எடுத்து, அது தொடர்பில் மிகுந்த சிரத்தை கொண்டிருப்பதாகவும் கூடத் தெரிகின்றது.

தன் செல்வாக்குச் சரிவது அரசுக்கு – ஆட்சிப் பீடத்துக்கு – புரியத் தொடங்கினால் உடனடித் தேர்தல்கள் – குறிப்பாக மாகாண சபைத் தேர்தல்கள் – நடைபெறாமல் தள்ளிப் போகும் என எதிர்பார்க்கலாம்.

அரசின் – ஆளும் தரப்பின் – செல்வாக்குச் சரிந்தாலும் கூட, அது எதிரணிக்கு சார்பான ஆதரவாக இன்னும் திரும்பவில்லை என்பதும் இவ்விடயத்தில் கவனிக்கப்பட வேண்டிய மற்றைய அம்சமாகும்.

# இளைஞர்களுக்கு குறைந்த வட்டியில் வணிகக் கடன்!

## நாமல் மத்திய வங்கியுடன் கலந்துரையாடல்



சிறு தொழில் நிறுவனங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ள இளைஞர்களுக்கு அரச வங்கிகள் மூலம் குறைந்த வட்டியுடன் வணிகக் கடன்களை பெற்றுக்கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடி வருகின்றார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ –

அண்மையில் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டபோது, இளைஞர்கள் வணிக கடன்களுக்கு விண்ணப்பிக்கும்போது தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எனக்குத் தெரிவித்தனர்.

இந்நிலையில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மூலம், இளைஞர்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் இன்றி நிதி உதவியைப் பெற உதவும் ஒரு கடன் திட்டத்தை வடிவமைக்க இலங்கை மத்திய வங்கியுடன் அமைச்சு கலந்துரையாடல்களைத் தொடங்கியுள்ளது. – எனக் கூறினார்.

தற்போது, தனியார் மற்றும் அரச வங்கிகளில் இந்த கடன்களுக்கான வட்டி மிகவும் அதிகமானது எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இது சிறு நிறுவன உரிமையாளர்களுக்கு செலுத்த முடியாமல் போகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

2021 வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி கடன் திட்டத்தை நிறுவ அமைச்சு போதுமான நிதியை ஒதுக்குகிறது, இதனால் இளைஞர்களுக்கு இலகுவாக வணிகக் கடன்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கார் விற்பனை நிலையத்துக்குள் மோதி நுழைந்த சொகுசுக் கார்!



கொழும்பு தாமரைத் தடாகத்திற்கு அருகிலுள்ள சொகுசு கார் விற்பனை நிலையம் ஒன்றின் மீது, சொகுசு வாகனமொன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகி உள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த இந்த சொகுசு வாகனம், கார் விற்பனை நிலையத்தின் கண்ணாடிகளை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பெறுமதியான சொகுசு கார் ஒன்றுக்கும், வாகன விற்பனை நிலையத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கறுவாத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போலிச் செய்திகளை பரப்பிய இளைஞன் நேற்றுக் கைது!

கொரோனா வைரஸ் காரணமாக இலங்கையின் வீதிகளில் பலர் உயிரிழந்து கிடந்தனர் என சமூக ஊடகங்களில் போலியான செய்திகளை வெளியிட்ட குற்றச்சாட்டுக்காக இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

28 வயதான மேற்படி நபர் நேற்றைய தினம் ஹந்தனை பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், இன்று அவர் கண்டி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

முன்னாதாக இவ்வாறு போலிச் செய்தியை பரப்பிய குற்றச்சாட்டின் கீழ் கடுகன்னாவை பகுதியில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை சமூக ஊடகங்களில் போலிச் செய்திகளை பரப்பும் நபர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும், அந்தக் குற்றச்சாட்டின் கீழ் மேலும் மூன்று சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# யாசகங்களைக் கட்டுப்படுத்த கொழும்பில் நடவடிக்கைகள்!

கொழும்பில் போக்குவரத்து சமிக்ஞைக்கு அருகே நிற்கும் யாசகர்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, கொழும்பில் யாசகர்களை தடுத்து வைக்க வார இறுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனக் கூறினார்.

கொரோனா தொற்று காலகட்டத்தில் யாசகர்கள் தங்கள் வாகனங்களை அணுகுவது தொடர்பாக பொதுமக்கள் கவலைகளை வெளியிட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனை அடுத்தது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் யாசகர்கள் அனைவரும் உண்மையானவர்கள் அல்லர் என்பது தெரிய வந்துள்ளது.

குறிப்பாக கொழும்பில் உள்ள பெரும்பாலான யாசகர்கள் ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கு பணம் சேகரிக்கப்பட்டு பொறுப்பான ஒருவரிடம் ஒப்படைக்கப்படுகிறது என்றும் இவ்வாறான போலி நபர்களிடமிருந்து உண்மையான யாசகர்களை அடையாளம் காண ஒரு சிறப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது என்றும் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

அதன்படி உண்மையான யாசகர்கள் அடையாளம் காணப்பட்டு சமூக சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் போலி யாசகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அஜித் ரோஹன கூறினார்.

## பஸ், ரயில் சேவைகள் வழமைக்கு!

வார இறுதியில் நிறுத்திவைக்கப்பட்ட பஸ் மற்றும் ரயில் சேவைகள் இன்று காலை முதல் வழமைபோல் இயங்கத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை மற்றும் மாலை நேர ரயில் சேவைகள் வழமையைபோன்று நடைபெறும் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனினும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை தவிர தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிற இடங்களிலுள்ள ரயில் நிலையங்களில் ரயில்கள் நிற்காதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் பஸ்களும் நிறுத்தப்படமாட்டாது என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

# விண்ணில் பாய்ந்தது ஸ்பேஸ் எக்ஸ் ராக்கெட்!



ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து அமெரிக்காவின் முழுமையான வணிக ரீதியான தனியார் விண்கலத்தை, நாசா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது. இதில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள 4 வீரர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, சர்வதேச விண்வெளி மையத்திற்கு ரஷ்யாவின் சோயுஸ் ராக்கெட்டுகள் மூலம் வீரர்களை அனுப்பி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்கத் தொழிலதிபர் எலான் மஸ்க் – கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு மனிதர்களை அனுப்புகின்ற திட்டத்தின் படி, க்ரூ டிராகன் விண்கலத்துடன் கூடிய பால்கன் 9 ரக ராக்கெட்டை தயாரித்துள்ளது.

க்ரூ டிராகன் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு நாசா மற்றும் ஜப்பான் வீரர்கள் 4 பேர் இன்று அனுப்பிவைக்கப்பட்டு உள்ளனர். புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து, இந்திய நேரப்படி அதிகாலை 5.57 மணிக்கு, பால்கன் 9 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது.

தனியாருக்கு சொந்தமான விண்கலத்தில், முழுமையான விண்வெளி பயணத்தை நாசா மேற்கொள்வது இதுவே முதல்முறையாகும். விண்வெளியில் பாய்ந்த பிறகு இரண்டாவது கட்டமாக பால்கன் ராக்கெட்டில் இருந்து வெற்றிகரமாக பிரிந்த க்ரூ ட்ராகன் விண்கலம், இலக்கை நோக்கி பயணம் மேற்கொண்டுள்ளது.

27 மணி நேர பயணத்துக்குப் பிறகு க்ரூ ட்ராகன் விண்கலம், நாளை சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை சென்றடையும். விண்வெளி வீரர்கள் 6 மாதம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் பணிகளை மேற்கொள்வார்கள்.

முழுவதும் ஆள்களை ஏற்றிச் செல்லும் இந்த விண்கலம், அளவில் அமெரிக்காவின் மிகப்பெரிய விண்கலம் எனக் கூறப்படுகிறது.

பால்கன் – 9 ராக்கெட் ஏவப்பட்டதை அமெரிக்க துணை அதிபர் மைக் பொம்பியோ நேரில் பார்வையிட்டார். அப்போது பேசிய அவர், அமெரிக்க விண்வெளி வீரர்கள் ரஷ்ய சோயுஸ் ராக்கெட்டுகளில் பறக்கலாம் எனவும், அதேபோன்று ரஷ்ய விண்வெளி வீரர்களும் வணிகக் குழு வாகனங்களில் பறக்கும் வாய்ப்பை பரிமாறிக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். ரஷ்யாவிற்கு இதனால் எவ்வித இழப்பும் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், அதிபர் பதவிக்கு தேர்வாகியுள்ள ஜோ பைடன் உள்ளிட்டோரும் ராக்கெட் வெற்றிகரமாக ஏவப்பட்டதற்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

## ரஷ்யாவின் ‘ஸ்புட்னிக் – வி’ தடுப்பூசி அடுத்த வாரம் இந்தியாவுக்கு வரும்!



ரஷ்யாவின் கொரோனா தடுப்பூசியான ஸ்புட்னிக் – வி, 2 மற்றும் 3 ஆம் கட்ட மருத்துவ பரிசோதனைக்காக, அடுத்த வாரம் இந்தியா கொண்டு வரப்பட உள்ளது.

இந்த மருந்துக்கான உற்பத்தி உரிமையை பெற்றுள்ள டாக்டர் ரெட்டிஸ் ஆய்வக நிறுவனம், பரிசோதனைக்கான அனுமதியை தலைமை மருந்து கட்டுப்பாட்டாளரிடம் ஏற்கனவே பெற்றுள்ளது.

கான்பூரில் உள்ள கணேஷ் சங்கர் வித்யார்த்தி மருத்துவக் கல்லூரிக்கு கொண்டு வரப்படும் தடுப்பூசி, தன்னார்வலர்கள் கொண்டு 2 மற்றும் 3 ஆம் கட்ட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளது.

## ஒலியை விட வேகமாகச் செல்லும் பிரம்மோஸ் ஏவுகணை சோதனை!




ஒலியைவிட வேகமாகச் சென்று இலக்கைத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணைகளை இம்மாத இறுதியில் பரிசோதிப்பதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.

இந்த ஏவுகணைகளை இந்தியப் பெருங்கடல் பகுதியில் இம்மாத இறுதியில் சோதிக்கப் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஏவுகணை செலுத்தும் வாகனத்தில் இருந்தும், கப்பலில் இருந்தும், விமானத்தில் இருந்தும் ஏவுகணைகள் செலுத்திப் பரிசோதிக்கப்படவுள்ளன. இவ்வகை ஏவுகணைகள் 450 கிலோமீற்றர் தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டவை.

இதேவேளை, தஞ்சாவூரில் உள்ள விமானப் படைத் தளத்திலும் பிரம்மோஸ் ஏவுகணையுடன் கூடிய, செலுத்தும் வாகனம் ஒன்று நிறுத்தப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

லடாக் எல்லையில் சீனாவுடன் பதற்றம் அதிகரித்துவரும் நிலையில் சவுரியா, பிரமோஸ் உள்ளிட்ட பல்வேறு ஏவுகணைகளை இந்தியா பரிசோதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காதலி மீது அசிட் வீசி, பெற்றோல் ஊற்றி தீ வைத்த காதலன் கைது!



முகாராஷ்டிரா மாநிலம் பீட் அருகே இளம் பெண் மீது அசிட் வீசிய அவளுடைய காதலன் பெற்றோல் ஊற்றி தீ வைத்ததில் அந்தப் பெண் உயிரிழந்தாள்.

கடந்த 13 ஆம் திகதி பிற்பகல் மோட்டார் வாகனத்தில் வந்து அந்த பெண் மீது அசிட் ஊற்றிய இளைஞன் பின்னர் பெற்றோலையும் ஊற்றி கொல்ல முயன்று தப்பிவிட்டான்.

அந்தப் பெண் பலத்த தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் நேற்றிரவு உயிரிழந்தாள். இதையடுத்து அதிரடியாக காதலனை தேடிப் பிடித்த பொலிஸார் அவனை கைது செய்தனர்.

## நேர்மையான அப்பழுக்கற்ற தலைவர் மன்மோகன் சிங்குக்கு ஒபாமா பாராட்டு



இந்திய பிரதமராக இருந்த காலத்தில் மன்மோகன் சிங், நேர்மையானவராகவும், தொலைநோக்கு சிந்தனை உள்ளவராகவும், அப்பழுக்கற்ற சுத்தமான தலைவராகவும் இருந்தார் என அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா பாராட்டி உள்ளார்.

A Promised Land என்ற தமது சுயசரிதையில் இதை குறிப்பிட்டுள்ள அவர், மன்மோகன் சிங் ஓர் அபூர்வமான அறிவாளியும், நாகரிகமான மனிதரும் ஆவார் என புகழாரம் சூட்டி உள்ளார்.

அதே நேரம், காலங்காலமாக அமெரிக்க உறவு தொடர்பாக இந்திய அதிகாரிகளிடம் நிலவும் ஐயங்களுக்கு உட்பட்டே அவர் எச்சரிக்கையுடன் அமெரிக்க உறவைக் கடைப்பிடித்தார் என்றும் ஒபாமா குறிப்பிட்டுள்ளார்.

## தீபாவளிக்கு சீன பொருள்கள் புறக்கணிப்பு அந்நாட்டுக்கு 40 ஆயிரம் கோடி ரூபா இழப்பு

இந்த வருட தீபாவளி பண்டிகையின் போது மக்கள் சீனாவின் பொருள்களை புறக்கணித்தமையால் அந்த நாட்டுக்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அனைத்திந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அனைத்திந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பு இந்தியாவின் முக்கிய நகரங்களான டெல்லி, மும்பை, சென்னை, பெங்களூர், கொல்கத்தா, நொய்டா, கொச்சின் உள்ளிட்ட 20 முக்கிய நகரங்களை விநியோக நகரங்களாக தெரிவு செய்து மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் –

சீன பொருள்கள் புறக்கணிப்புக்கு மத்தியில் தீபாவளி பண்டிகை காலத்தில் 20 விநியோக நகரங்களில் நுகர்வோர் சாதனங்கள், தங்க நகைகள், காலணிகள் என அனைத்து விதமான பொருள்களும் சுமார் மொத்தம் 72 ஆயிரம் கோடி ரூபாவுக்கு வியாபாரம் நடந்துள்ளது.

சீன பொருள்களை மக்களும், வர்த்தகர்களும் புறக்கணித்தமையால் அதன் விற்பனை அடியோடு முடங்கியது. இதனால் சீனாவுக்கு இந்த பண்டிகை காலத்தில் மட்டும் 40 ஆயிரம் கோடி ரூபா வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை வர்த்தகர்களும், பொது மக்களும் சீன பொருள்களை புறக்கணிக்க வேண்டும் என்று சி.ஏ.ஐ.டி. ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊடுருவ முயற்சித்த பாக். இராணுவம் தடுத்து நிறுத்தினர் இந்திய வீரர்கள்!



எல்லையில் ஊடுருவ முயற்சித்த பாகிஸ்தானின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டதாக இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பனிக்காலத்தைப் பயன்படுத்தி பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவ 300 தீவிரவாதிகள் எல்லையருகே தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிக்கின்றனர் எனவும் தீவிரவாதிகளை இந்தியாவுக்குள் ஊடுருவச் செய்ய பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தி வருவதாகவும் இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் எல்லையில் நடைபெற்ற தாக்குதலில் அப்பாவி மக்கள் மற்றும் இந்திய வீரர்கள் 11 பேர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு இந்தியா பதிலடி கொடுத்து எல்லையில் உள்ள பாகிஸ்தான் இராணுவ முகாம்களையும் தீவிரவாத பதுங்கிடங்களையும் தாக்கியது. இதில் பத்துக்கும் மேற்பட்ட பாகிஸ்தான் இராணுவத்தினர் உயிரிழந்தனர். இதனால் பாகிஸ்தானின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டதாக இராணுவ வீரர்கள் தெரிவித்தனர்.

# பிலிப்பைன்ஸை தாக்கிய சூறாவளி உயிரிழப்பு 67 ஆக அதிகரித்தது!





இந்த ஆண்டு பிலிப்பைன்ஸைத் தாக்கிய மிக மோசமான சூறாவளி காரணமாக இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துள்ளது.

அதே நேரத்தில் நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட மோசமான வெள்ளத்தால் வடக்கில் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன்படி ககாயனில் இருபத்தி இரண்டு, தெற்கு லூசனில் 17, மெட்ரோ மணிலாவில் எட்டு, மேலும் இரண்டு பிராந்தியங்களில் 20 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு வாம்கோவால் பிராந்தியத்தில் 12 பேர் இன்னும் காணவில்லை என்றும் கிட்டத்தட்ட 26 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 45 ஆண்டுகளில் எங்களுக்கு ஏற்பட்ட மிக மோசமான வெள்ளம் இதுதான் என ககாயன் ஆளுநர் மானுவல் மாம்பா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு உலகின் மிக சக்திவாய்ந்த வாம்கோ மற்றும் சுப்பர் டைபூன் கோனி உட்பட நான்கு வார காலப்பகுதியில் ஆறு சூறாவளிகள் பிலிப்பைன்ஸைத் தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காபூல் பல்கலை தாக்குதல் முக்கிய சூத்திரதாரி கைது!



நவம்பர் 2 ஆம் திகதி காபூல் பல்கலைக்கழகம் மீது தாக்குதல் மேற்கொண்டு பலரின் உயிரிழப்புக்கு காரணமான முக்கிய சூத்திரதாரியை கைதுசெய்துள்ளதாக ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளது.

மூன்று துப்பாக்கித் தாரிகள் காபூல் பல்கலைக்கழகத்தில் மூர்க்கத்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு 22 பேரை படுகொலை செய்தனர். அத்துடன் இந்த அனர்த்தம் காரணமாக மேலும் 27 பேர் காயமடைந்தும் இருந்தனர்.

இந்நிலையில் காபூல் பல்கலைக்கழக தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரி கைது செய்யப்பட்டுள்ளார் என துணை ஜனாதிபதி அம்ருல்லா சலே தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய மூன்று பேரும் கொல்லப்பட்ட பின்னர் நிறைவடைந்த இந்தத் தாக்குதலுக்குத் திட்டமிட்ட சூத்திரதாரியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டாரில் ஆப்பானிஸ்தான் மற்றும் தலிபானுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்த பல பேச்சுகள் வெற்றிகரமாக நடைபெற்று முடிவடைந்த நிலையிலும் அங்கு தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எதியோப்பியாவில் உள்நாட்டுப் போர் படுதீவிரம் 8 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சூடானில் தஞ்சம்!

ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ஆயிரக்கணக்கானோர் அண்டை நாடான சூடானில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

டைக்ரே மாகாணத்தில் அரசுக்கும் போராளிக் குழுவினருக்கும் இடையே மோதல் நீடிக்கிறது. இதனால் அங்கு தொடர்ந்து அசாதாரண சூழல் நிலவி வரும் நிலையில் அந்நாட்டு மக்கள் குடும்பம் குடும்பமாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இந்த நிலையில், எல்லையில் உள்ள நதியைக் கடந்து சூடானின் ஹம்தயாத் நகரில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தஞ்சம் புகுந்துள்ளனர்.



# பெருவின் இடைக்கால ஜனாதிபதி மானுவல் மெரினோ இராஜினாமா!

## பதவியேற்று ஒரு வாரத்துக்குள்

ஜனாதிபதி பதவியை ஏற்ற ஒரு வாரத்திற்குள் பெருவின் இடைக்கால ஜனாதிபதி மானுவல் மெரினோ பதவியில் இருந்து விலகியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடந்த பாரிய ஜனநாயக சார்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து, பதவியிலிருந்து விலகுகிறார் என மக்களுக்கான ஒரு தொலைக்காட்சி உரையில் அவர் அறிவித்தார்.



காங்கிரஸின் தலைவராக இருந்த மெரினோ, கடந்த செவ்வாய்க்கிழமை பதவியேற்றார். மேலும் தனது அதிகாரத்தை அங்கீகரிக்க மறுத்த பெருவியர்களிடமிருந்து உடனடி எதிர்ப்பை எதிர்கொண்டார்.

ஏப்ரல் ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்காளர்கள் தங்கள் குரல்களைக் கேட்க முடியும் என்று மெரினோ உறுதியளித்தார். ஆனால் அமைதியின்மை தொடர்ந்தது, சனிக்கிழமையன்று இரண்டு எதிர்ப்பாளர்கள் பொலிஸாரால் கொல்லப்பட்டனர். ஞாயிற்றுக்கிழமைக்குள், மெரினோவின் அமைச்சரவையில் பெரும்பாலானவர்கள் இராஜினாமா செய்திருந்தனர், மேலும் காங்கிரஸ் அவரை அந்தப் பதவியை கைவிட வலியுறுத்தியது. இதனால் மெரினோ தனது இராஜினாமாவை அறிவித்தார்.


பெருவின் தலைநகரில் உள்ள சுற்றுப்புறங்களில் மெரினோவின் இராஜினாமா செய்தியைத் தொடர்ந்து பல கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

பெருவின் தலைநகரில் உள்ள சுற்றுப்புறங்களில் கார் கொம்புகள், பானை இடிப்பது மற்றும் உற்சாகப்படுத்துதல் போன்ற சத்தங்கள் உடனடியாக இராஜினாமாச் செய்தியைத் தொடர்ந்து வந்தன.

கடந்த சனிக்கிழமையன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களிலிருந்து 20 வயது மதிக்கத் தக்க இரண்டு பேர் இறந்தமை மெரினோவின் இராஜினாமாவுக்கான பொது ஆரவாரத்தை அதிகரித்தது.

பெருவின் மனித உரிமைகள் ஒருங்கிணைப்பாளர் கடந்த சனிக்கிழமை அணிவகுப்பைத் தொடர்ந்து 40 இற்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை என்று தெரிவித்தார். 90 இற்கும் மேற்பட்டோர் காயங்களுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர் என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# பெருவின் ஜனாதிபதி பதவிநீக்கம் எதிரான போராட்டத்தில் வன்முறை



பெருவில் முன்னாள் ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்தில் வன்முறை இடம்பெற்றுள்ளது.

ஊழல் குற்றம் சுமத்தப்பட்ட மார்ட்டின் விஸ்காரா அதிபர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு அந்நாட்டின் நாடாளுமன்ற தலைவரான மானுவேல் மெரினோ ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டமையையடுத்து அங்கு போராட்டங்கள் நடைபெற்று வருகிறன.

இந்த நிலையில் தலைநகர் லிமாவில் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்கிய போராட்டக்காரர்கள், தடுப்புகளை மீறி பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பதிலுக்கு கண்ணீர் புகை குண்டுகளை வீசி பொலிஸார் போராட்டக்காரர்களைக் கலைத்ததால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இரு தரப்புக்கும் இடையே நடைபெற்ற இந்த மோதலில், 2 பேர் கொல்லப்பட்டனர் எனவும், பலர் காயமடைந்தனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி பதவியை ஏற்ற ஒரு வாரத்திற்குள் பெருவின் இடைக்கால ஜனாதிபதி மானுவல் மெரினோ பதவியில் இருந்து விலகியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வாக்குகள் மிகவும் சூசகமாக திருடப்பட்டன மீண்டும் வெற்றிபெறுவேன் என்கிறார் ட்ரம்ப்!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடுகள் மூலமே ஜோ பைடன் வென்றார் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், விரைவில் தான் மீண்டும் வெற்றி பெறப் போகிறார் என நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தீவிர இடதுசாரிகளுக்குச் சொந்தமான தனியார் நிறுவனத்தால் வாக்குகள் எண்ணப்பட்டமையாலேயே ஜோ பைடன் வென்றார் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.



அத்துடன், வாக்கு எண்ணிக்கையின் போது பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வாக்கு எண்ணும் மையங்களில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறுகள் அனைத்தும் தனது வாக்குகளைத் திருடும் போது ஏற்பட்டன எனத் தெரிவித்துள்ள ட்ரம்ப், ஜோ பைடன் தரப்பினர் சிக்கிக் கொள்ளாமல் சாமர்த்தியமாகத் தப்பித்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனைவிட, தபால் வாக்குப்பதிவானது கேலிக்கூத்தானது என டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

# தேசிய வேலைத்திட்ட அபிவிருத்தியின்கீழ் கண்டி மாவட்டத்தை உருவாக்க ஏற்பாடு!




கண்டி, நவ.16

* கண்டியில் தலா 10 கோடி ரூபா வீதம் 40 கோடி ரூபா செலவில் 04 தேசிய பாடசாலைகள்.
* கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தலா 2000 ரூபாய் வீதம் போசாக்கு பொதி.
* ஆயுர்வேதம் என்ற பெயரில் இயங்கும் போலி மசாஜ் பார்லர்கள் மீது சோதனை நடத்தி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை.
* மத்திய மாகாணத்தில் பிளாஸ்ரிக், பொலித்தீன் சேகரித்து மீள்சுழற்சி வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படும்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக தேசிய அளவில் செயற்படுத்தப்பட்டு வரும் கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் கண்டி மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கண்டி மாவட்டம் முழுவதும் கிராம மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கும், செயற்படுத்த வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டமொன்று தொடர்பில் கலந்துரையாடுவதற்கு 'சமூக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக் குழு' நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கண்டி மாவட்ட செயலக காரியாலயத்தில் கூடியது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திகள் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

புதிய அரசாங்கம் பௌதீக வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் போன்று மனித வள அபிவிருத்தி என்பவற்றை நோக்காக கொண்டு இந்த அபிவிருத்தி செயற்திட்டத்தை ஆரம்பித்துச் செயற்படுத்துவதுடன், அபிவிருத்தி குழு கூட்டத்தில் அந்தந்த அமைச்சுக்களின் சார்பில் கண்டி மாவட்டத்தில் செயற்படுத்தப்படவுள்ள பல வேலைத்திட்டங்கள் தொடர்பில் கீழ்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

**கல்வி**

கண்டி மாவட்டத்தில் தலா 10 கோடி ரூபா வீதம் 40 கோடி ரூபா செலவில் 04 தேசிய பாடசாலைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

வளல ஏ.ரத்நாயக்க விளையாட்டு பாடசாலையை மேம்படுத்தி அடுத்த ஆண்டில் பாடசாலைக்குள் தங்குமிட வசதிகளுடன் தரம் 8 இற்காக டெலண்ட் ஐடின்டிஃபிகேன் வேலைத்திட்டமொன்றின் கீழ் விளையாட்டில் திறமை வாய்ந்த 35 பிள்ளைகளை இணைத்துக் கொள்வதுடன், ஒரு பிள்ளைக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்து அவர்கள் விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்திலிருந்து சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த ஆண்டில் அந்தப் பாடசாலையில் 130 மீற்றர் செயற்கை ஓடும் பாதையை நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் பல்வேறு திட்டங்கள் ஊடாக 100 கோடி ரூபா முதலீட்டை வளல ஏ.ரத்நாயக்க விளையாட்டு பாடசாலைக்கு ஈடுபடுத்துவதற்குத் தயாராக இருப்பதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். மாவட்டத்தில் ஆசிரியர் இருப்பு மிகவும் திறனற்றதாக இருப்பதால் தேசிய அளவில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை வகுக்க முன்மொழியப்பட்டது.

கண்டியில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் காணப்படும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வெளி மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் ஆசிரியர்கள் அங்கு நீடித்திருக்காமைக்கு முக்கிய காரணம் அவர்களுக்குத் தங்குவதற்குப் பொருத்தமான இடம் இல்லாமையாகும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக தேவையுள்ள பாடசாலைகளை அடையாளங்கண்டு ஆசிரியர் தங்குமிடங்களை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டது.

**மகளிர் மற்றும் குழந்தைகள்**

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா ஊட்டச்சத்து பொதியை 10 மாதங்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது.

குழந்தை பருவ வளர்ச்சியில் சிறப்பு கவனம் செலுத்தி கண்டி மாவட்டம் முழுவதும் தேசிய கொள்கையுடன் பல திட்டங்களைச் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசு மற்றும் தனியார் துறை இணைந்து மகளிர் மற்றும் குழந்தை பராமரிப்பு திட்டங்கள் கண்டி மாவட்டத்தில் செயற்படுத்தப்படுவதுடன், 1938 மகளிர் உதவி மற்றும் ஆலோசனை சேவைகள் அவசர பிரிவு 24 மணி நேரமும் இயங்குகிறது.

**கல்விச் சேவைகள்**

கண்டி மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் ஒரு முன்பள்ளி மற்றும் ஒரு பகல் நேர பராமரிப்பு மையத்தை வழங்க ஏற்பாடுகள் செய்வதுடன், வெளிப்புற குழந்தைகள் பூங்காவும் இதில் உள்ளடங்கும்.

கழிப்பறைகள், கழிவறைகள் மற்றும் தண்ணீர் வசதி இல்லாத அனைத்து பாடசாலைகளுக்கும் அந்த வசதிகளை இவ்வாண்டு பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், அதன்படி 2021 முதல் இலங்கையில் ஒவ்வொரு பாடசாலையிலும் மேற்கண்ட வசதிகள் பூர்த்தி செய்யப்படும்.

டிசெம்பர் 25 இற்கு முன்னர் பாடசாலைப் பிள்ளைகளுக்கு புத்தகங்கள், சீருடைகள் மற்றும் காலணிகளை வழங்குதற்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார்.

**சுகாதாரம்**

தோட்ட வைத்தியசாலைகளை அரசுக்குக் கையகப்படுத்துவதில் கண்டி மாவட்டத்துக்கு முன்னுரிமை அளிக்கவும், 2021 ஏப்ரல் மாதம் கண்டி மாவட்டத்தில் தாதியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

தெல்தெனிய வைத்தியசாலை கொரோனாச் சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதால், பொதுவான நோய்களுக்கு சிகிச்சை பெறும் மக்களுக்காக அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சிறப்பு சிகிச்சை பிரிவுகளை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கண்டி வைத்தியசாலைகளில் தற்போது இரண்டு பி.சி.ஆர் இயந்திரங்களால் கொரோனா சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், அடுத்த வாரத்திற்குள் புதிய பி.சி.ஆர் இயந்திரம் கிடைக்கும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

**சுதேச வைத்திய பிரிவு**

உள்நாட்டு மருந்துகள் நாட்டில் பயிரிடப்பட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இந்த அளவுக்கு இலங்கையைப் பாதித்த கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்த உள்ளூர் நோய்த்தடுப்பு மருந்துகளே காரணம் என்று மக்கள் நம்புகிறார்கள் என்று கூறப்பட்டது.

சுதேச வைத்திய பயிற்சி நிறுவனத்தை மேம்படுத்தவும், எதிர்காலத்தில் இந்த நோக்கத்துக்காக அதிக மாணவர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கண்டி நகரத்திலும் அதற்கு அப்பாலும் மசாஜ் பார்லர்கள் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்த விவாதம் கவனம் செலுத்தியது. மேலும் அவற்றைத் தடுக்கும் பொருட்டு, ஆயுர்வேத பெயரில் இயங்கும் போலி மசாஜ் பார்லர்கள் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து சோதனை செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மசாஜ் பார்லர்களைப் பதிவு செய்வதற்கான செயல்முறை கடுமையான சட்ட கட்டமைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் என்று அபிவிருத்தி குழுவுக்கு தெரிவிக்கப்பட்டது.

**உள்ளூராட்சி நிறுவனங்கள்**

மத்திய மாகாணத்தில் பிளாஸ்ரிக் பொலித்தீனை சேகரித்து மீள்சுழற்சி செய்வதற்கும் மீள்சுழற்சி திட்டத்தைத் தொடங்குவதற்கும் பராமரிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாக அபிவிருத்தி குழுவில் விவாதிக்கப்பட்டது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் இன்று முதல் அபாயமானவை!

## தொற்று நோயியல் பிரிவு அறிவிப்பு



கொழும்பில் இன்று (திங்கட்கிழமை) காலை முதல் தனிமைப்படுத்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் அபாயமுடையவை என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசங்களில் இனங்காணப்படாத தொற்றாளர்கள் இருக்கக் கூடும் என்பதன் காரணமாகவே அவை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என அந்தப் பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், மருதானை, கோட்டை, புறக்கோட்டை, கொம்பனி வீதி மற்றும் டாம் வீதி ஆகிய தனிமைப்படுத்தப்பட்டுள்ள இந்த பகுதிகள் அபாயமுடையவையாகும்.

இங்கு இனங்காணப்படாத தொற்றாளர்கள் இருக்கக் கூடும். எனினும் தொற்று வெளிப்படுவதற்கு சிறிது காலம் எடுக்கும். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடும்.

எனவே குறித்த பிரதேசங்களில் இருந்து ஏனைய பகுதிகளுக்கு தொற்று பரவக்கூடாது என்பதற்காகவே அவை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் அத்தியாவசிய தேவைக்கான சேவைகள் தடையின்றி முன்னெடுக்கப்படும். இவ்வாறான சேவைகளில் ஈடுபடுபவர்கள் அடிப்படை சுகாதார வசதிகளைப் பின்பற்ற வேண்டும்.

மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் உருவாகிய கொத்தணி தற்போது கட்டம் கட்டமாக குறைவடைந்து வருகிறது.

பேலியகொடை கொத்தணி பாரிய கொத்தணியாக உருவாகியது. இதனுடன் தொடர்புடைய தொற்றாளர்கள் நாளாவிய ரீதியிலும் இனங்காணப்பட்டனர்.

கொழும்பு மாநகரசபை மற்றும் கம்பஹா மாவட்டத்தில் சில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளில் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும்.

தற்போது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தால் மிக விரைவில் கட்டுப்படுத்த முடியும் என்று நம்புகின்றோம். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிய அரசமைப்புத் தயாரிக்கும் போது மக்களை முன்னிறுத்தி இருக்கவேண்டும்!

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 16

புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு கட்சிகளுக்குமான அரசியல் அபிலாஷைகளைக் கைவிட்டு, நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய வகையில் நீண்டகால அடிப்படையில் மக்களை முன்னிறுத்தி அதனைத் தயாரிப்பது அவசியமாகும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி வலியுறுத்தியிருக்கிறார்.

புதிய அரசமைப்பு தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விசேட ஆணைக்குழுவின் செயலாளருக்கு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி அனுப்பிவைத்திருக்கும் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

அண்மைக்காலத்தில் புதிய அரசமைப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த 42 வருடகாலத்தில் 20 தடவைகள் திருத்தம் செய்யப்பட்ட அரசமைப்புக்குப் பதிலாக அனைவருக்கும் பொருத்தமானதும் நீண்டகால நோக்கிலானதுமான புதிய அரசமைப்பொன்றைத் தயாரிப்பது அவசியம் என்பதே எமது அபிப்பிராயமாகும்.

அதற்காக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காகத் தற்போதைய அரசாங்கம் விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்தமை வரவேற்கத்தக்கதாகும். எனினும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றோம்.

அதன்படி புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு கட்சிகளுக்குமான அரசியல் அபிலாஷைகளைக் கைவிட்டு, நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய வகையில் நீண்டகால அடிப்படையில் மக்களை முன்னிறுத்தி அதனைத் தயாரிப்பது அவசியமாகும்.

அதேபோன்று இலங்கை இனரீதியான இளைஞர் எழுச்சியையும் சுமார் மூன்று தசாப்தகால போரை எதிர்கொண்ட நாடாகும். எனவே எதிர்காலத்தில் அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதவாறு, அனைத்து இனங்களின் உரிமைகளையும் உறுதிசெய்யும் வகையில் புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக அடிக்கடி அரசமைப்புத் திருத்தத்தை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தனையைத் தோற்றுவிக்காதவாறு, அனைத்து தரப்பினரதும் வெவ்வேறு அபிப்பிராயங்களையும் விசேட ஆணைக்குழு கருத்திலெடுத்துச் செயற்பட வேண்டும்.

மேலும் தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி நிலையில் மக்களின் ஒட்டுமொத்த அவதானமும் அதிலேயே குவிந்திருக்கிறது. ஆகவே புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகத் தெளிவுபடுத்தல் விழிப்புணர்வூட்டல் செயற்திட்டமொன்றை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்குகின்றோம்.

அத்தோடு ஆலோசனைகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எனினும் தற்போதைய சூழ்நிலையில் அக்காலவரையறை எவ்விதத்திலும் போதுமானதல்ல. ஆகவே மக்கள் தமது ஆலோசனைகளை வழங்குவதற்குப் போதிய கால அளவையும், ஆலோசனைகளைப் பெறுவதற்கான மாவட்ட ரீதியான கட்டமைப்புக்களையும் உருவாக்க வேண்டும் என்று அந்தக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடக்கம் செய்வது தொடர்பாக இந்த வாரம் இறுதி முடிவாம்!

## சுகாதார அமைச்சர் சொல்கிறார்

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களைப் புதைப்பதற்கு அனுமதி வழங்குவதா அல்லது இல்லையா என்பது தொடர்பாக சுகாதார அமைச்சு இந்த வாரம் உறுதியான தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் இறக்கும் முஸ்லிம்களைப் புதைக்க அனுமதி வழங்கப்பட்டதாக சமீபத்தில் சமூக வலைத்தளங்களில் வெளியான செய்தி பரவலாகப் பேசப்பட்டது.



ஆனால் அரசாங்கத்தை சேர்ந்த சிலர், இந்த விடயத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது எனக் கூறினர். அதேபோன்று அரசாங்கத்தை சேர்ந்த மற்றுமொரு தரப்பினர் அனுமதி வழங்கப்படவில்லை எனக் கூறியுள்ளனர்.

இந்நிலையிலேயே இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளவை வருமாறு -

கொரோனா மரணங்களைப் புதைப்பது தொடர்பில் அமைச்சரவையில் கருத்து பரிமாறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப குழுவுடன் கலந்துரையாடி முடிவு எடுக்குமாறு எனக்கு அறிவிக்கப்பட்டது.

எனவே, அதனுடன் தொடர்புள்ள தொழில்நுட்ப குழுவின் சில அறிக்கைகள், எனக்கு கிடைக்க வேண்டியுள்ளது. அந்த பரிந்துரைகள் கிடைத்ததும் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்க இருக்கின்றோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பில் ஜனாதிபதி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்!



கொழும்பு, நவ. 16

நாட்டில் தற்போது தனிமைப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளின் நாளாந்த நிலைமை தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது சுகாதார அதிகாரிகளிடம் இருந்து சாதகமான சமிக்ஞைகள் கிடைத்ததும் தனிமைப்படுத்தலில் இருந்து சில பகுதிகள் தளர்த்தப்படும் என்றும் அறிய முடிகின்றது.

இதேவேளை தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் கொரோனா தொற்று மேலும் பரவாமல் தடுக்க வீட்டுக்குள்ளேயே தங்குமாறும் இராணுவத் தளபதி பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு இன்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சட்டவிரோத பொதுக் கூட்டங்கள் மற்றும் மக்கள் நடமாட்டங்களைக் கண்காணிக்க ட்ரோன் மூலமான கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்ட 12 பொலிஸ் பிரிவுகளைத் தவிர, இன்று முதல் கோட்டை, புறக்கோட்டை, மருதானை, டாம் வீதி, கொம்பனித் தெரு உள்ளிட்ட பகுதிகளும் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதியான நோயாளிகளின் எண்ணிக்கை நேற்று 3 ஆயிரத்து 500 ஐத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உடல்களை அடக்கம் செய்யும் முஸ்லிம் உரிமைகளில் அரசியல் செய்யவேண்டாம்!

## பகவந்தலாவ ராகுல ஹிமி தெரிவிப்பு



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யும் உரிமையைப் பெற்றுக் கொடுங்கள் என பகவந்தலாவ ராகுல ஹிமி தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டலின் கீழ் அடக்கம் செய்வதற்கு ஜனாதிபதி ஆவனசெய்ய வேண்டுமெனவும் அவர் வலியுறுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக ராகுல ஹிமி மேலும் கூறியுள்ளவை வருமாறு -

சடலங்களை வைத்துக் கொண்டு அரசியல் செய்வதற்கு இடமளிக்க வேண்டாம். இஸ்லாமியர்களின் மனதைக் காயப்படுத்தி, அவர்களை கோபத்துக்குள்ளாக்காதீர்கள். அது எமக்குப் பாவம்.

இஸ்லாமியர் ஒருவர் மரணித்து விட்டால் அவரது உடலை என்ன செய்ய வேண்டும் என அந்த மதத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இப்போது நாட்டில் புதிய கதையொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது - இறந்தவர்களின் உடலை எரிப்பதா? அடக்கம் செய்வதா? என்பதாகும். ஆனால், இறந்தவர்களின் உடலை எரிப்பது பாவமென்று இஸ்லாமிய தர்மம் கூறியுள்ளது. இறந்தவர்களின் உடலுக்கு மரியாதை செய்ய வேண்டும்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இறந்த ஜனாஸாக்களை வைத்துக் கொண்டு அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். கவலையாக இருக்கிறது. இயற்கையும், பிரபஞ்சமும் இதையா எதிர்பார்க்கிறது? எங்களை விட உயர்ந்த நாடுகளில் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்கா, கனடா, இத்தாலி, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் சடலங்கள் எரிக்கப்படவில்லை. சுகாதாரத்துறை என்ன கூறுகிறதோ அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏன் இலங்கை நாட்டில் மாத்திரம் தகனம் செய்து கொண்டிருக்கிறார்கள்?

இந்த நாட்டின் தலைவர்களே இந்த விவகாரம் தொடர்பில் சரியான ஒரு பதிலை இந்நாட்டு மக்களுக்கு வழங்குங்கள். என்ன நடைமுறை என இலங்கை அரசாங்கம் சரியான சட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லையேல் ஜனாதிபதி மக்களின் மனதை ஆறுதல்படுத்தும் வகையில் வார்த்தையொன்றைக் கூறவேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 24 மணித்தியாலங்களில் கொழும்பில் மாத்திரம் 541 கொரோனா தொற்றாளர்!

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளம் காணப்பட்ட 704 கொரோனா தொற்றாளர்களில் 541 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு இன்று (திங்கட்கிழமை) காலை கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிலையில், கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளை வைத்திருந்த பலர் தற்பொழுது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இன்று அதிகாலை 5 மணி முதல் தனிமைப்படுத்தல் அமுல்படுத்தப்பட்ட பகுதிகளிலேயே அதிகமானோர் இனங் காணப்பட்டுள்ளனர் எனவும் இராணுவத் தளபதி சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதிக்குப் பின்னர் நேற்று வரையில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 5 ஆயிரத்து 127 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய மற்றும் பேலியகொடை கொத்தணிகள் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து, இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.11.2020 இல் வெளியிடப்பெற்றது.